www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 6th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் - I<br>Geography - I | Three Hours<br>Gr. 13 (2022) | 22 | T | I |

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**
- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிற்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப் பட வேண்டும்

## பகுதி - I

- ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. இடம் ஒன்றின் தனிஅமைவு, அல்லது சார்பு அமைவினை சரியாக எடுத்துக் காட்டுவதற்கு இடவிளக்கப்படங்களில் பயன்படுத்தப்படுகின்ற நுட்பமுறைகளில் ஒன்று.
   (1) அகல நெடுக்கோடுகளுக்கு ஏற்ப வரையப்படுதல்.
   (2) திசை குறிப்பிடப்பட்டிருத்தல்.
   (3) பண்பாட்டம்சங்களுக்கிடையிலான இடைத்தொடர்பினை எடுத்துக்காட்டுதல்.
   (4) இடவுயரம் குறிப்பிடப்பட்டிருத்தல்.
   (5) சமவுயரக்கோடுகள் மூலம் உயர வேறுபாடு வரையப்படுத்தல். (…...)

2. 1:50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படங்களில் பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசத்தின் எல்லையை வரைந்து காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம்.
   (1) சிவப்பு (2) கறுப்பு (3) பச்சை (4) மஞ்சள் (5) நீலம் (…...)

3. செய்முறைப் புவியியலில் விஞ்ஞான நுட்பமுறைகள் அதிகளவில் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் படங்கள்.
   (1) போக்குவரத்துப் படங்கள்
   (2) பயிர்ச் செய்கைப் பரம்பல் படங்கள்
   (3) மண் பரம்பல் படங்கள்
   (4) வானிலைத் தகவல் படங்கள்
   (5) விலங்கு வேளாண்மைப் பரம்பல் படங்கள் (…...)

4. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை (GPS) இன் விண்வெளிப்பிரிவில் நிறுத்தப்பட்டுள்ள செய்மதிகளின் வேகத்தினையும், அவற்றின் அச்சில் நாளொன்றிற்குப் பயணிக்கும் தடவைகளையும் தரும் விடையைத் தெரிவு செய்க.
   (1) 10000, 2 (2) 10500 1 (3) 11,000 2 (4) 12000, 3 (5) 12500 4 (…...)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

5. இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஓர் அம்சத்துடன் சரியான பொருத்தத்தைக் கொண்ட நிறம் மற்றும் குறியீட்டினைக் காட்டும் விடை என்ன?
(1) சேற்று நிலம் - பச்சை
(2) உள்ளூராட்சிப் பிரிவு – சிவப்பு முறிகோடு
(3) நடைபாதை – நீலம்
(4) பிரதான வீதி – மஞ்சள்
(5) வரலாற்று முக்கியம் வாய்ந்த இடம் - கறுப்பு (…...)

6. எண்ணிக்கை அடிப்படையில் முன்வைக்கப்படாத தரவுகள்.
(1) அளவு சார் தரவுகள்
(2) முதல்நிலைத் தரவுகள்
(3) தொடர்ச்சியற்ற தரவுகள்
(4) கூட்டமாக்கப்படாத தரவுகள்
(5) பண்பு சார் தரவுகள் (…...)

7. குடி என்பது.
(1) ஆய்வின் தலைப்புடன் தொடர்புடைய முழு விடயங்களையும் குறிக்கும்.
(2) ஆய்வின் தலைப்புடன் தொடர்புடைய விடயத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தெரிவு செய்வதனைக் குறிக்கும்.
(3) ஒரு நாட்டில் குறிப்பிட்ட காலப்பகுதியில் உள்ள மக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.
(4) ஆய்விற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் வினாக் கொத்து ஒன்றின் மூலம் சேகரித்துப் பெற்றுக் கொள்வது.
(5) ஆய்வுடன் தொடர்புடையவர்களுடன் கலந்துரையாடி தகவலைச் சேகரித்துக் கொள்வது. (…...)

8. நிலப்பயன்பாடு, காட்டுப்போர்வை, காலநிலை வானிலைத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்படுகின்ற இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்கள் எவை?
(1) வினாக்கொத்து (2) பங்கேற்பு அவதானிப்பு (3) வான்வழி ஒளிப்படங்கள்
(4) நூலக மூலதாரங்கள் (5) கலந்துரையாடல் (…...)

9. இலங்கைக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகள் தொடர்பான விபரங்களை வரைந்து காட்டுவதற்குப் பயன்படும் வரைபு
(1) கூம்பக வரைபு (2) எளிய பார் வரைபு (3) வட்டவரைபுகள்
(4) சமகணியப்படங்கள் (5) இடக்கணியப்படங்கள் (…...)

10. சிறுவர் சனத்தொகையில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சி, எதிர்காலத்தில் வயது முதிர்தோர் சனத்தொகையில் ஏற்படும் அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளை விளங்கி அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு உதவுகின்ற வரைபு எது?
(1) இரட்டைப்பார் வரைபு (2) பல்பார் வரைபு (3) கூம்பக பார் வரைபு
(4) சமயகணியப் படங்கள் (5) இடக் கணியப் படங்கள் (…...)

11. கற்கோளத்தின் உப பிரிவுகள்.
(1) சமுத்திரப் படுக்கைகள், மலைத் தொடர்கள் (2) ஓசோன்படை, பாறைகள்
(3) மாறன் மண்டலம், படை மண்டலம் (4) சமுத்திர நீர், வளி மண்டல நீர்
(5) அங்கி, இனம் (…...)

12. மண்ணின் படையமைப்பில் கழுவிச் செல்லும் வலயம் என அழைக்கப்படும் படை எது?
(1) O படை (2) B படை (3) R படை (4) A படை (5) C படை (…...)

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

13. கதிரியக்க சக்தி உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் அணு சக்தி உற்பத்திக்குப் பயன்படும் கனியம்.
(1) மெக்னெடைட் (2) டொலமைற் (3) தோரினைட் (4) பெல்ஸ்பார் (5) டங்ஸ்டன் (……)

14. புவித்தகடுகள் ஒன்றோடு ஒன்று மோதும் போது ஒரு தகட்டினுள் மற்றொரு தகடு அமிழுவதனால் ஏற்படும் அமுக்கத்தின் காரணமாக உருவாகும் நிலவுருவம்.
(1) குறைகள் (2) அகழிகள் (3) தீவுகள்
(4) மடிப்பு மலைகள் (5) மத்திய சமுத்திரப் பாறைத் தொடர்கள் (……)

15. இழுவிசைத் தொழிற்பாடு காரணமாக உருவாகிய நிலவுருவத்தினை பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.
(1) பிளவுப் பள்ளத்தாக்கு (2) குனிந்த மடிப்பு (3) தலைகீழ் மடிப்பு
(4) குவிந்த மடிப்பு (5) சாம்பல் கூம்பு (……)

16. தள்ளல் தீப்பாறை நிலவுருவங்கள் அடங்கிய விடையைத் தெரிக.
(1) வில்லைத் தீப்பாறை, கூட்டெரிமலை, எரிமலைக் கூம்பு
(2) எரிமலைக் கூம்பு, சாம்பல் கூம்பு, எரிமலை வாய்
(3) குழிவுத் தீப்பாறை, குமிழ் தீப்பாறை, கிடைத் தீப்பாறை
(4) எரிமலைக் கழுத்து, லாவா கூம்பு, குமிழ்த் தீப்பாறை
(5) குழிவுத் தீப்பாறை, குமிழ் தீப்பாறை, லாவா கூம்பு (……)

17. ஆற்றின் முதிர்ச்சிப் பருவத்தில் காணப்படும் பண்புகளில் ஒன்று.
(1) நீரின் அளவு குறைவு
(2) பருப் பொருட்கள் அதிகம்
(3) பக்கச் சுரண்டல் ஏற்படும்
(4) நீரின் வேகம் அதிகம்
(5) படிதல் செயற்பாடு இடம்பெறும் (……)

18. தொம்போலா என்பது
(1) காற்றின் அரித்தலினால் உருவாகும் நிலவுருவம்
(2) கடல் அலையினால் உருவாகும் படிதல் நிலவுருவம்
(3) கடல் அலையின் அரித்தலினால் உருவாகும் நிலவுருவம்
(4) பனிக்கட்டியாற்றின் படிதல் நிலவுருவம்
(5) ஓடும் நீரினால் உருவாகும் நிலவுருவம் (……)

19. மேற்காவுகை மழைவீழ்ச்சி, அயனச் சூறாவளிகளின் தாக்கம் என்பவற்றினைக் கொண்டிருக்கும் கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டு வகை எது?
(1) A – அயனக் காலநிலை
(2) Am – அயனமொன்சூன் காலநிலை
(3) B – வரண்ட காலநிலை
(4) Aw – அயன ஈர வரட்சிக் காலநிலை
(5) Af – அயன ஈர மழைக் காலநிலை (……)

20. எல்நினோ தோற்றப்பாடு நிகழ்வதற்கான காரணம்.
(1) பசுபிக் சமுத்திரத்தின் வெப்பநிலையில் ஏற்படும் சடுதியான அதிகரிப்பு
(2) பசுபிக் சமுத்திரப் பகுதியில் ஏற்படும் தீவிரமான குளிர் நிலமை
(3) அத்திலாந்திக் சமுத்திரப் பகுதியில் ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்பு
(4) ஸ்பெயின் பிரதேசத்தில் ஏற்படும் வெப்ப அதிகரிப்பு
(5) தென்மேற்குப் பசுபிக் சமுத்திரப் பகுதிகளின் அசாதாரணமாக குளிர் நிலைமைகள் தோற்றுவிக்கப்படல். (……)



Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

21. பின்வருவனவற்றுள் பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்திற்கான மூன்று பிரதான துறைகளை இறங்குவரிசை ஒழுங்கில் சரியாக எடுத்துக் காட்டும் தெரிவு யாது?
(1) போக்குவரத்து, விவசாயம், கைத்தொழில்
(2) வலுச்சக்தி, கைத்தொழில், காடழிப்பு
(3) விவசாயம், காடழிப்பு, வலுச்சக்தி
(4) போக்குவரத்து, காடழிப்பு, விவசாயம்
(5) கைத்தொழில், வலுச்சக்தி, விவசாயம் (…...)

22. அயனப் புல்வெளிகளுக்கு பிறேசில், ஒரினாகோ வடிநிலம், ஆபிரிக்கப் பகுதிகளில் வழங்கப்படும் பெயர்களை முறையே தருக.
(1) பிறேயரீஸ், பம்பாஸ், வெல்ட்
(2) ஸ்ரெப்பீஸ், பிறேயரீஸ், டவுன்ஸ்
(3) கம்பஸ், லியானாஸ், சவன்னா
(4) சவன்னா, டவுன்ஸ், வெல்ட்
(5) கம்பஸ், ஸ்ரெப்பீஸ், பிறேயரீஸ் (…...)

23. இலங்கையின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளைப் பாதுகாக்கும் நோக்கில் ஆற்று வடிநில நீர் முகாமைத்துவம் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் நிறுவனம் எது?
(1) மத்திய சூழல் அதிகார சபை
(2) வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம்
(3) கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்
(4) சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவகம்
(5) புவிச்சரிதவியல் ஆய்வு, சுரங்கப் பணியகம் (…...)

24. மூன்று வகையான மானிடவியல் இடர்களைச் சரியாக எடுத்துக் காட்டும் விடை எது?
(1) கைத்தொழில் இடர்கள், போர், எண்ணெய் சிந்துதல்.
(2) எண்ணெய் சிந்துதல், காட்டுத்தீ, எரிமலை வெடிப்பு
(3) புவிநடுக்கம், வெள்ளப்பெருக்கு, சூறாவளி
(4) எண்ணெய் சிந்துதல், தொற்று நோய் பரவுதல், எரிமலை வெடிப்பு
(5) காட்டுத்தீ, வெள்ளப்பெருக்கு, இடிமின்னல் (…...)

25. இலங்கையில் அதிகளவு நிலப்பரப்பில் பரவியுள்ள காலநிலை வலயம் எது?
(1) தாழ்நில ஈரவலயம் (2) உயர் நில ஈரவலயம் (3) அதிவரள் வலயம்
(4) உயர் நில உலர் வலயம் (5) தாழ்நில உலர் வலயம் (…...)

26. இலங்கையின் வரண்ட வலயத் தாழ்நிலங்களில் காணப்படும் மரபு ரீதியான குளக் கிராமங்களின் குடிப்புள்ளியல் பண்புகள்
(1) ஒரே வகையான சனத்தொகை, மொத்த சனத்தொகை குறைவு
(2) கருக் குடும்பங்கள், உள்வரும் சனத் தொகை இடப்பெயர்வு இல்லை
(3) கூட்டுக் குடும்பங்கள், உள்வரும் சனத்தொகை அதிகம்
(4) பல்லின சமூகம், கூட்டுக் குடும்பங்கள்
(5) ஒரே வகையான சனத்தொகை, மொத்த சனத்தொகை அதிகம் (…...)

27. நேர்கோட்டுக் குடியிருப்பில் காணப்படும் முனைப்பான அம்சங்கள்
(1) கட்டடங்கள் செறிவு, அதிகளவு இடைத் தொடர்பு
(2) வீட்டுத்தோட்டம், நெல் வயல்கள் தூரத்தில் அமைந்திருக்கும்.
(3) வீடுகள் வீதியோரத்தில் அமைந்திருக்கும், வீட்டுத்தோட்டங்கள், நெல் வயல்கள் ஒன்றாக அமைந்திருக்கும்.
(4) மத்திய மயப்படுத்தப்பட்ட நடவடிக்கை, கட்டடங்கள் வீதியோரமாக அமைந்திருக்கும்.
(5) கட்டடங்கள் கொத்தணியாகக் காணப்படும், சேவை மையங்களை இலகுவாக அடைய முடியும். (…...)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

28. சனத்தொகையின் சுருக்கக் கூம்பகத்தில் காணப்படும் பண்பு
(1) உயர் பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்
(2) குறைந்த வாழ்க்கை எதிர்பார்ப்புக்காலம், உயர் பிறப்பு வீதம்
(3) உயர் இறப்பு வீதம், குறைந்த வாழ்க்கை எதிர்பார்ப்புக் காலம்
(4) நீண்ட வாழ்க்கை எதிர்பார்ப்புக் காலம், குறைந்த பிறப்பு வீதம்
(5) நீண்ட வாழ்க்கை எதிர்பார்ப்புக் காலம், குறைந்த இறப்பு வீதம் (……)

29. ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களிலிருந்து இடம் பெயர்வோரில் அதிகமானவர்கள் சென்றடைகின்ற பிரதேசம்
(1) தென்னாசியா (2) மத்திய கிழக்கு (3) தூர கிழக்கு
(4) ஐரோப்பா (5) லத்தீன் அமெரிக்கா (……)

30. 1990 களிலிருந்து இலங்கையின் குடித்தொகை வளர்ச்சியில் காணப்படும் முனைப்பான போக்கு
(1) முதியோர் தொகை அதிகரிப்பு, பிறப்பு வீத வீழ்ச்சி
(2) இறப்பு வீதம் அதிகம், பிறப்பு வீதம் அதிகம்
(3) இடப்பெயர்வு அதிகம், பிறப்பு வீதம் அதிகம்
(4) சிசு மரண வீதம், இறப்பு வீதம் அதிகம்
(5) முதியோர் தொகை வீழ்ச்சி, இறப்பு வீதம் அதிகம் (……)

31. பருமட்டான பிறப்பு வீதத்திலிருந்து பருமட்டமான இறப்பு விதத்தினைக் கழிப்பதன் மூலம் கணிப்பீடு செய்யப்படுவது.
(1) சிசு மரண வீதம்
(2) கற்பிணித் தாய் மரண வீதம்
(3) சனத்தொகைப் பருமன்
(4) இயற்கை அதிகரிப்பு
(5) சனத்தொகையின் பால் விகிதம் (……)

32. 2008 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் வாழ்வியல் சூழல் அறிக்கையின் படி 2025 இல் பெருநகரங்கள் முதல் மூன்று இடங்களையும் பெறும் என எதிர்வு கூறப்பட்டிருக்கும் நகரங்கள் முறையே
(1) ரோம், வோசிங்டன், பரீஸ்
(2) சுவாபோலோ, சிட்னி, கன்பரா
(3) இலண்டன், இஸ்லாம - பாத், கெய்ரோ
(4) நியூயோர்க், கொல்கத்தா, சென்னை
(5) டோக்கியோ, மும்பை, புது டெல்லி (……)

33. கொழும்பு நகரத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் வசிக்கின்ற சேகரிப் பகுதிகள்
(1) வெள்ளவத்தை, பாமன் கடை
(2) ஹேன முல்லை, கன முல்லை
(3) லுனு பொகுன, மஹவத்த
(4) கோமாகம, பொரளை
(5) கடவத்த, மகரகம (……)

34. உலக விவசாயத்தில் ஏகபோகத் தனியுரிமையைக் கொண்டிருப்பது.
(1) சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம்
(2) பல்தேசியக் கம்பனிகள்
(3) குறிப்பிட்ட நாட்டின் ஜனாதிபதி
(4) தனியார் துறையினர்
(5) அரச சார்பான நிறுவனங்கள் (……)



Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

35. பசுமைப் புரட்சியினால் ஏற்பட்ட சூழல் தாக்கங்கள் இரண்டினைத் தரும் விடை
(1) உணவு உற்பத்தி அதிகரிப்பு, விவசாயிகளின் கடன் சுமை அதிகரிப்பு
(2) உயிர் பல்வகைமை பாதிப்பு, இரசாயனப் பாவனையால் நீரின் இயல்புகள் மற்றமடைதல்
(3) நிலம் இழப்பு, கடன் அதிகரிப்பு
(4) பணக்கார விவசாயிகள் தோற்றம், உயிர் பல்வகைமை பாதிப்பு
(5) உணவு உற்பத்தி அதிகரிப்பு, நிலம் இழப்பு (……)

36. வர்த்தக ரீதியிலான இரும்புப்படிவுகள் காணப்படும் அவுஸ்ரேலியாவின் பகுதி
(1) பெரிய பிரிப்பு மலைத்தொடர் பகுதி
(2) கால் கூலி கூல்காலிப் பகுதி
(3) டார்வின் பிரதேசம்
(4) எமர்ஸ்லி மலைத் தொடர் பிரதேசம்
(5) பேர்த் பிரதேசம் (……)

37. பின்வருவனவற்றிலிருந்து விவசாய மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலைத் தெரிக.
(1) இரும்புருக்குக் கைத்தொழில்
(2) காரியக் கைத்தொழில்
(3) மோட்டார் வாகனக் கைத்தொழில்
(4) சீமேந்துக் கைத்தொழில்
(5) சீனிக் கைத்தொழில் (……)

38. பல்தேசியக் கம்பனிகள் தென்கிழக்கு, தெற்காசிய, ஆபிரிக்க நாடுகளில் ஆடை தயாரிப்பு, உணவு தயாரிப்பு போன்ற கைத்தொழில்களைப் பரவலடையச் செய்வதற்கான காரணம் யாது?
(1) உட்கட்டமைப்பு வசதிகள்
(2) நாடுகள் வழங்குகின்ற சலுகைகள்
(3) தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ள முடிவது.
(4) அரசின் கொள்கைகள்
(5) சாதகமான காலநிலை (……)

39. தென்னாசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டு
(1) ஆசியான் (2) பிம்ஸ் ரெக் (3) பிறிக்
(4) G – 7 (5) சார்க் (……)

40. குறைவிருத்தியுடைய நாடுகள் உலகசந்தைக்குள் செல்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தது.
(1) பொருளாதாரக் கூட்டுக்கள்
(2) விருத்தியடைந்த நாடுகள்
(3) G – 7 நாடுகள்
(4) பூகோளமயமாதல்
(5) நாடு காண் பயணம் (……)

(40x1 = 40 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# பகுதி - II

**அறிவுறுத்தல்கள்:**
- பகுதி II இரண்டில் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் 1: 50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும், உலகப்புறவுருவப்படமும் வழங்கப்படும்

1. இலங்கையின் நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட **1: 50000** அளவுத் திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக்கோடுகளின் இடைவெளி **20** மீற்றரினால் காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.

**குறிப்பு :**
- ✶ படத்தில் விடைகள் எழுதப்படலாகாது.
- ✶ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் உபபிரிவு இலக்கத்தினையும் விடைத்தாளில் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.
- ✶ உமது விடைத்தாளுடன் இடவிளக்கப் படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) படத்தில் காணப்படும் நிர்வாக எல்லையைப் பெயரிடுக. *(01 புள்ளி)*

(ii) படப்பிரதேசத்தின் தென்மேற்கு மூலையில் காணப்படும் வடிகால் பாங்கினைப் பெயரிடுக. *(01 புள்ளி)*

(iii) G என்ற அடைக்கப்பட்ட பகுதியில் காணப்படும் விவசாய நிலப்பயன்பாட்டு வகைகள் நான்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) G பகுதியில் காணப்படும் சேவைமையங்கள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

(v) படப்பகுதியில் காணப்படும் முனைப்பான வடிகால் பாங்குகள் இரண்டினைப் பெயரிட்டு, வடிகால் பாங்கிற்கும் தரைத் தோற்றத்திற்கும் இடையிலான தொடர்பினை இரண்டு ஆதாரங்களுடன் விளக்குக. *(05 புள்ளிகள்)*

(vi) படப்பகுதியின் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை வரையறுத்துள்ள இரண்டு பௌதிகக் காரணிகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(vii) படப்பகுதியின் குடியிருப்புப் பாங்கினை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(04 புள்ளிகள்)*

2. தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) கடகக் கோடு

(ii) றொக்கிமலைத்தொடர்

(iii) கொங்கோ நதி

(iv) காபென்ரேரி வளைகுடா

(v) அரேபியன் மேட்டு நிலம்

(vi) தித்திக்காக ஏரி

(vii) கியூபா

(viii) அகுகாஸ் நீரோட்டம்

(ix) இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தில் கேபிள் கார் திட்டத்தினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்ட நாடு

(x) 2025 இல் உலகில் அதிக சனத்தொகை கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படும் ஜப்பானிய நகரம்.

(10 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - III

3. (i) முதல் நிலைத் தரவுகள் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
   (ii) முதல் நிலைத் தரவு சேகரிக்கும் நுட்ப முறைகள் நான்கு தருக. (02 புள்ளிகள்)
   (iii) முதல் நிலைத் தரவுகள் சேகரிக்கும் போது எதிர்கொள்கின்ற மூன்று பிரதிகூலங்களை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) இரண்டாம் நிலைத் தரவுகளை ஆய்வாளன் பயன்படுத்துகின்ற போது எதிர்நோக்கும் இரண்டு பிரச்சினைகளை விளக்குக. (05 புள்ளிகள்)

4. (i) புவியியல் தகவல் முறைமை (GIS) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
   (ii) (a) புவியியல் தகவல் முறைமையின் பிரதான கூறுகள் நான்கு தருக.
   (b) மேலே (ii – a) இல் குறிப்பிட்ட முறைகளில் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)
   (iii) புவியியல் தகவல் முறைமையின் முக்கியத்துவத்தினை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (04 புள்ளிகள்)
   (iv) புவியியல் தகவல் முறைமையினை (GIS) உபயோகித்து படம் ஒன்றினை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூன்று பிரதான தரவு மூலாதாரங்களைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

5. (i) தரவு என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
   (ii) தரவுகளின் நான்கு வகைகளைத் தருக. (04 புள்ளிகள்)
   (iii) புவியியல் தரவுகளை முன்வைப்பதில் வரைபுகள் பயன்படுத்தப்படுவதனால் கிடைக்கின்ற இரண்டு நன்மைகளை விளக்குக. (04 புள்ளிகள்)
   (iv) படங்களில் பயன்படுத்தப்படுகின்ற தொடர்பாடல் நடவடிக்கைகள் மூன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

6. (i) அட்டவணை I இல் 23 மாணவர்கள் புவியியல் பாடத்தில் பெற்ற புள்ளிகள் தரப்பட்டுள்ளன.

   அட்டவணை I மாணவர்கள் புவியியல் பாடத்தில் பெற்ற புள்ளிகள்

| |
|---|
| 17, 25, 26, 36, 40, 42, 44, 46, 48, 49, 50 |
| 52, 55, 56, 58, 60, 65, 66, 70, 75, 78, 80, 82 |

   இத்தரவினைப் பயன்படுத்தி பிரிக்கை வரைபடம் ஒன்றினை வரைக. (07 புள்ளிகள்)

   (ii) பிரிக்கை வரைபில் இருந்து முதலாம் இரண்டாம், மூன்றாம் காலணைகளைக் கணிக்கவும். (03 புள்ளிகள்)
   (iii) பிரிக்கை வரைபடத்தின் மூன்று பண்புகளை விளக்குக. (05 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 6th Term Examination - 2022

FWC

புவியியல் - II
Geography - II

Three Hours

Gr. 13 (2022)

| 22 | T | II |
|---|---|---|

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

## பௌதிகப் புவியியல்

1. (i) அகவிசையின் தொழிற்பாட்டினால் உருவாகும் இரண்டு நிலவுருவங்களையும், புறவிசையின் தொழிற்பாட்டினால் உருவாகும் இரண்டு நிலவுருவங்களையும் தருக. (02 புள்ளிகள்)

 (ii) அமுக்க விசையின் தொழிற்பாடு காரணமாக ஏற்படுகின்ற மூன்று மடிப்புக்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

 (iii) இழுவிசைத் தொழிற்பாடு காரணமாக உருவாகும்.
 1. நேர் மாறான குறை
 2. பிதிர்வுக் குறை
 3. பிளவுப் பள்ளத்தாக்கு என்பவற்றினை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக.

 (06 புள்ளிகள்)

 (iv) எரிமலை வெடிப்பின் காரணமாக புவியின் மேற்பரப்பில் உருவாகின்ற மூன்று நிலவுருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

2. (i) கெப்பன் காலநிலைப் பாகுபாட்டிற்கு அடிப்படையாகப் பயன்படுத்திய இரண்டு நியதிகளைத் தருக.

 (02 புள்ளிகள்)

 (ii) கெப்பனின் அயன பருவக் காற்றுக் காலநிலை பரந்துள்ள இரண்டு பிரதேசங்கள், அக்கால நிலையின் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

 (iii) இலங்கையின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்துகின்ற
 (a) பூகோள ரீதியான காரணிகள்
 (b) பிராந்திய ரீதியான காரணிகள்
 (c) உள்ளூர் காரணிகள் என்பவற்றை விளக்குக. (06 புள்ளிகள்)

 (iv) இலங்கையைத் பாதிக்கின்ற காலநிலையியல் இடர்கள் இரண்டினை விளக்குக.

 (06 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

3. (i) கீழே A,B,C,D எனத் தரப்பட்ட விடயங்கள் ஐக்கிய நாடுகளின் சூழல் நிகழ்ச்சித் திட்டத்தினால் (UNEP) விசேடமாக உருவாக்கப்பட்டதாகும். இவற்றின் செயலகங்கள் அமைந்துள்ள நகரங்களை முறையே தருக.

   A. இடம் பெயர் விலங்குகள் தொடர்பான உடன்படிக்கை
   B. அபாயத்திற்கு உள்ளாகியுள்ள அருகி வரும் உயிரினங்களின் வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கை
   C. சூழல், மற்றும் கைத்தொழில்
   D. பாதிப்பை ஏற்படுத்தும் இரசாயனப் பதார்த்தங்கள் (02 புள்ளிகள்)

(ii) சூழலும் பேண்தகு அபிவிருத்தியும் என்ற தொனிப் பொருளில் 1992 ஆம் ஆண்டு பிறேசிலின் றியோடி ஜெனிரோ நகரில் இடம்பெற்ற புவி உச்சி மாநாட்டின் பிரதான பணிகள் மூன்றினை விளக்குக. (06 புள்ளிகள)

(iii) இலங்கையின் மத்திய சூழல் அதிகார சபையின் (CEA) மூன்று பணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் கரையோரத்தினைப் பாதுகாப்பதற்கு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் (C CD) மேற் கொண்டு வரும் மூன்று பணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

4. (i) மத்திய தரைக் காட்டு உயிர்ப் பெரும் திணிவு வகைகள் பரந்துள்ள நான்கு பிரதேசங்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) மத்திய தரைக் காட்டு உயிர்ப் பெரும் திணிவின் தாவரங்களின் மூன்று பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் நான்கு வகையான புல் நிலச்சூழல் தொகுதிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் சூழற்தொகுதிகள் எதிர்நோக்குகின்ற மூன்று பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II மானிடப் புவியியல்

5. (i) “சர்வதேச இடப்பெயர்வு” என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) இடப்பெயர்வினால் குடியகல்வு நாடுகளுக்கு ஏற்படும் மூன்று சாதக, பாதக விளைவுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) இடப்பெயர்வாளர்கள் குடியேறுகின்ற நாடுகளில் ஏற்படுகின்ற சாதக பாதகமான மூன்று விளைவுகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் குடித்தொகைப் பரம்பல் போக்கினை மூன்று காரணிகளின் அடிப்படையில் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

6. (i) வர்த்தக விவசாயம் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (02 புள்ளிகள்)
   (ii) விவசாயத்தில் விளைச்சலை அதிகரிப்பதற்குப் பின்பற்றப்பட்டு வருகின்ற மூன்று நுட்பமுறைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)
   (iii) விவசாயம் தற்காலத்தில் எதிர்நோக்குகின்ற மூன்று சவால்களை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கையின் விவசாயத்தில் இனங்காணக் கூடிய மூன்று நவீன போக்குகளை விளக்குக. (06 புள்ளிகள்)

7. (i) ஐக்கிய அமெரிக்காவில் போக்குவரத்தின் விருத்தி காரணமாக கைத்தொழில்கள் இடவமைவு பெற்றுள்ள நான்கு மையங்களைத் தருக. (02 புள்ளிகள்)
   (ii) கைத்தொழிலை ஓரிடப்படுத்தும் சந்தைக் காரணிகளின் முக்கியத்துவத்தினை மூன்று காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக. (06 புள்ளிகள்)
   (iii) இலங்கையின் இறப்பர், பிளாஸ்டிக் கைத்தொழிலின் மூன்று பண்புகளை ஆராய்க. (06 புள்ளிகள்)
   (iv) கைத்தொழில் அமைவிடம் தொடர்பான அண்மைக் காலப்போக்குகள் மூன்றினை ஆராய்க. (06 புள்ளிகள்)

8. (i) இலங்கையில் அதிக மக்கள் வாழ்கின்ற நான்கு நகரங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) இலங்கையின் குறைந்தளவான நகராக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற மூன்று காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) இலங்கையில் நகராக்கத்துடன் தொடர்புடைய மூன்று போக்குகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கையில் நகராக்கத்துடன் இணைந்து காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வைக்கப்பட்ட மூன்று நடவடிக்கைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் ஆறாம் தவணைப் பரீட்சை - 2022

**தரம் 13 புவியியல்   படம் (2 ஆம் வினாவிற்கு உரியது)**



www.agaram.lk
agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!